07.07.2022

C.C.257/2021

அ.சா.1

முத்துராமன்

த/பெ.தனுஸ்கோடி

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். கு.வி.மு.ச. பிரிவு 311–ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் வைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை.

அ.சா.6 நதியா எனக்கு மனைவி. ராமச்சந்திரன் மனைவி வனிதா எனது அண்ணன் மனைவி. கட்டையாபட்டி முத்து எனது உறவினர். முத்து மனைவி ராக்கம்மாள் எனது உறவினர். போலீசார் விசாரணையிலும், வாக்குமூலம் தனுஸ்கோடியை ஆறுமுகம் அருவாளால் இடது பக்க தலையில் வெட்டியுள்ளார் என்று சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை. அப்படி சொல்லியிருந்தால் அது தவறு. போலீஸ் விசாரணையிலும் எனது புகார் வாக்குமூலத்திலும் நாகன் எனது அப்பா தனுஸ்கோடியை மூக்கில் வேல் கம்பால் குத்தி ரத்த காயப்படுத்தினார் என்று சொல்லியுள்ளேன். நான் புகார் கொடுக்கும் போது போலீஸ் விசாரணையிலும் எனது அம்மாவின் மணிக்கையில் கம்பால் முறிக்கி, முறிக்கி உடைத்தார் என்று சொல்லியுள்ளேன். பூமிநாதனை எதிரி ராஜேந்தின் இடது பக்க தலையில் வெட்டி, முதுகில் வீக்க காயத்தை ஏற்பட்டுத்தினார் என்று கூறியுள்ளேன்.

காவல் நிலையம் சென்று நான் புகார் கொடுத்தேன். நான் புகார் கொடுக்கும்போது காயம்பட்ட நாங்கள் அனைவரும் எழுதி கையெழுத்துப்போட் புகார் கொடுத்தோமா என்றால் நான் மட்டும் எழுதி புகார் கொடுத்தேன். அவர்கள் உடன் இருந்தார்கள். எனது அம்மா, அப்பாவிற்கு நரிக்குடி அரசு மருத்துவமனையில் 1 மணிநேரம் சிகிச்சை பார்த்தோம். நான் நரிக்குடி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும்போது எதிரி தரப்பில் நாகன் எங்கள் மீது புகார் கொடுத்தாரா என்றால் நான் இருக்கும் வரை கொடுக்கவில்லை. அதற்கு பின்னார் கொடுத்திருக்கலாம். ஆறுமுகன் மகன் தவமுத்து நாகனை கம்பால் அடித்து வயக்காட்டில் தள்ளிவிட்டார் என்ற சம்பவம் வயக்காட்டில் நடந்தது. அந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட எதிரி ஆறுமுகம் ஆகும். நாகன் பாதிக்கப்படவில்லை. மேற்படி சம்பவம் காலை 8.00 மணிக்கு நடந்தது. அந்த

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட ஆறுமுகத்தை தவிர எங்கள் தரப்பில் நாள்வர் இருந்தோமா என்றால் 3 நபர்கள் இருந்தோம்.

ஆறுமுகத்தை தாக்கிய சம்பவத்தை ஆறுமுகம், பாக்கியராஜ், சங்கிலி ஆகிய மூவரும் வயக்காட்டில் இருந்தார்கள். எதிரி ஆறுமுகம் வயக்காட்டில் எங்களுக்கு தண்ணீர் பாய்ச்சும் போது எதிரி ஆறுமுகம் அவர் வயக்காட்டிற்கு தண்ணீர் திறந்தால்தான் பிரச்சனை ஏற்பட்டது. எனது அப்பா மட்டும் ஏன் தண்ணீர் திறக்கிறாய் என்று கேட்டதால் பிரச்சனை. எனக்கு 7 மணி முதல் 8 மணி வரை காலையில் வயக்காடடில் தண்ணீர் பாய்ந்தது. ராமச்சந்திரன் வைத்திருந்த கத்தி, கம்பினால் நாகனை இடது தோள்பட்டையில் வெட்டிய சம்பவம் ஊருக்குள் நடந்த சம்பவமாகும். முத்துராமன் கடப்பாறையால் ஆறுமுகத்தை ஓங்கி இடது மணிக்கட்டில் அடித்து அதில் மணிக்கட்டு உடைந்ததாக என் மீது வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் நாங்கள் அந்த இடத்தில் இல்லை. இரவு 7.30 மணியளவில் இருட்டுக்குள் வண்டி மாடை கொண்டுவந்து வைத்து எதிரிகள் சண்டைபோட்டார்கள் என்று சொல்லவில்லை. மேற்படி சம்பவம் தனுஸ்கோடி வீட்டிற்குள் நடந்தது. நாங்கள் வீட்டிற்குள் சாப்பிட்டுக்கொண்டிருந்ததால் எதிரிகள் எந்த, எந்த திசையில் இருந்து வந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் வீட்டிற்குள் இருந்து பார்த்தேன்.

எனது வீட்டிற்கு முன் தெரு லைட் உள்ளதா என்றால் மாட்டு வண்டி நிறுத்தும் இடத்தில் இருந்தது. மாண்டு வண்டியை ஆட்கள் இழுத்து வந்ததாக போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். எனது அப்பாவும், அம்மாவும் தான் முதலில் 5 நிமிடத்திற்கு முன்பு வெளியே வந்தார்கள் நாங்கள் அனைவரும் வீட்டிற்குள் இருந்தோம். நாங்கள் வீட்டிற்குள் இருந்து வெளியே வரும்போது எனது பொற்றோர்களுக்கு காயம் இருந்தது. நான் முதல் முதலில் காயம் பார்த்தேன். அதற்கு முன் என்ன நடந்தது என்றால் சரியல்ல. சங்கிலி கம்பால், வேல்கம்பு கொண்டு என்னை இடது பக்க தலையில் வெட்டினார் என்று போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. என் மீது போட்ட வழக்கு பொய் வழக்கு என்று முடித்ததற்கு நாங்கள் எந்த செலவும் செய்யவில்லை. நாங்கள் காவல் நிலைத்தில் கொடுத்த புகாரை தவிர நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை.

அ.சா.2 இருளாயி எனது அம்மா. மற்ற சாட்சிகள் அனைவரும் எனது உடன் பிறந்தவர்கள். ஆறுமுகத்துடன் எனது தரப்பினர் வயக்காட்டில் சண்டை போடவில்லை என்றால் மேற்படி பிரச்சனை நடந்திருக்காது என்றால் சரியல்ல. நாங்கள் பிரச்சனை செய்யவில்லை. எனக்கு எழுத, படிக்க தெரியும். நான் 6ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். அ.சா.ஆ.1 புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது. புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரியல்ல. புகார் மனு கொடுத்தது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.இந்த வழக்கு சம்பந்தமாக நான் வழக்கறிஞர் யாரையும் நியமிக்கவில்லை. நான் வழக்கறிஞரின் ஆலோசனை படி புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் உண்மையிலேயே எதிரிகள் தான் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிரிகளை வயக்காட்டில் சண்டைபோட்டதும் இல்லாம். அன்று மாலை 7.30 மணிளயவில் எதிரிகளை தெருவில் வைத்து அடித்ததால் இருட்டில் எதிரிகளை அடிக்கிறோம் என்று நினைத்து எங்களுக்குள் அடித்து காயம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. எதிரிகள் வயதானவர்கள் என்றாலும், இளவதை சேர்ந்த நாங்கள் எதிரிகளை அடித்து காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன நாள் நேரத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் எதிரிகள் சொன்ன ஆயுதங்களை வைத்து தாக்கவில்லை என்றாலும், நான் சொன்ன நேரத்தில் புகார் கொடுக்வில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு இந்த வழக்கிற்கும் சம்பவந்தமில்லை என்றால் சரியல்ல. நாங்கள் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி எங்கள் மீது உள்ள வழக்கை பொய் வழக்கு என்று முடித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல.

07.07.2022

C.C.257/2021

அ.சா.2

இருளாயி

க/பெ.தனுஸ்கோடி

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். கு.வி.மு.ச. பிரிவு 311–ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் வைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை.

போலீசார் விசாரணையில் ஆறுமுகம் கம்பால் எனது கணவரை இடது புஜத்தில் அடித்தார் என்று சொல்லியுள்ளேன். சங்கிலிகம்பால் எனது கணவரை இடது விலாவில் அடித்தார் என்று சொல்லியுள்ளேன். பாக்கியராஜ் எனது மகன் ராமச்சந்திரனை மண்டையில் வெட்டி காயப்படுத்தினார் என்று சொல்லியுள்ளேன். ஆறுமுகம் கம்பால் எனது மகன் ராமச்சந்திரனை அடித்தார் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். பூமிநாதனை ராஜேந்தின் வேல்கம்பால் மண்டையில் வெட்டி காயப்படுத்தினார் என்று சொல்லியுள்ளேன். ஆறுமுகம் அவர் வயக்காட்டில் தண்ணீர் பாய்ச்சும் போது தண்ணீர் பாய்ச்ச கூடாது என்று எனது கணவர் சொன்னதால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த பிரச்சனையானது எனது கணவர் எனது மகன்கள் தண்ணீர் பாய்ச்ச கூடாது என்று சொல்லவில்லை என்றால் நடந்திருக்காது என்றால் சரியல்ல.

அன்று இரவு 7.30 மணியளவில் நடந்த சண்டையில் கூட்டமாக 10, 20 பேர் சண்டையை விலக்கி விட்டார்களா என்றால் தெரு லைட் கிடையாது அதனால் எத்தனை நபர்கள் விலக்கி விட்டார்கள் என்று எனக்கு தெரியாது. எல்லோரும் மொத்தமாக அடித்ததால் யார், யார் எங்கு அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் வீட்டிற்குள் அடித்தது தெரியும். வீட்டிற்குள் சண்டை போடும்போது நானும் எனது கணவரும் வெளி வாசலில் நின்றுகொண்டிருந்தோம். எனக்கு காயம் ஏற்பட்டதா, அல்லது எனது மகன்களுக்கு காயம் ஏற்பட்டது இருட்டுக்குள் காயம் ஏற்பட்டது தெரியாது என்றால் தெரியும். நாங்கள் புகார் கொடுக்கும்போது எதிரிகள் புகார் கொடுக்க வந்தார்களா என்றால் தெரியாது. என்னை எந்த போலீசார் விசாரித்தார்கள் என்று தெரியுமா என்றார் போலீசார் என்று தெரியும் யார் என்று தெரியாது. ஊரில் உள்ள

பொதுவாக ஆட்களை விசாரித்தால் யார் மீது தவறு என்று தெரியவரும் என்றால் எங்களுக்கு கேட்ட ஆள்ளில்லை. நரிக்குடி காவல் நிலைத்திற்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் இருசக்கர வாகனத்தில் சென்றோம். எனக்கு காயம்பட்ட உடன் மயக்கம் வரவில்லை. சொன் தேதியில் சம்பவம் நடக்க வில்லை என்றால் சரியல்ல. சம்பவமானது காலை 7.30 மணியளவில் எதிரி நாகனையும், ஆறுமுகத்தையும் எங்கள் தரப்பினர்கள் அடித்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு காலை வெட்டி சதை தொங்கியதாக சொல்லக்கூடிய இடம் வயக்காடு ஆகும். ஊருக்குள் நடந்த சம்பவயிடத்திற்கும் எனது வீட்டிற்கும் சுமார் 2 கி.மீ தொலைவு இருக்கும். எனது கணவருக்கு காலில் ஏற்பட்ட காயம் வயக்காட்டிலும் மற்ற காயங்கள் எதிரிகளால் வீட்டில் ஏற்ப்பட்டது. காலில் எனது கணவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு கை வைத்தியம் செய்தோம். மேற்படி சங்கதிகளை போலீசார் விசாரணையிலும், புகார் வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன். ஆறுமுகம் கம்பை வைத்து எனது கை மணிக்கட்டில் அடித்துவிட்டார் என்று சொல்லியுள்ளேனா என்றால் நாகன் வலது கை மணிக்கட்டில் அடித்தார். நாகன் கம்பால் இடது முதுகு, காலில் அடித்ததாக சொல்லவில்லை ஆறுமுகம் அடித்தார். நான் சொல்வது போல் சொன்ன நாள் நேரத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றாலும், நாங்கள் எதிரி தரப்பினரை அடித்து காயப்படுத்த வேண்டும் என்றும் எனது மகன்கள் என்னை அடித்தால் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சொன்ன தேதியில் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றார் சரியல்ல. சொன்ன சம்பவங்கள் அனைத்தும் வீட்டிற்குள் நடந்தது.

அந்த வீடு காரை வீடாகும். சொன்ன தேதியில் சொன்ன மாதிரி சம்பவம் நடக்கததால் நான் சம்பவத்தை மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

07.07.2022

C.C.257/2021

அ.சா.3

ராமசந்திரன்

த/பெ.தனுஸ்கோடி

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். கு.வி.மு.ச. பிரிவு 311–ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் வைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை.

போலீசார் விசாரணையில் ஆறுமுகம் கம்பால் எனது அப்பாவை புஜத்தில் அடித்ததாக சொல்லியுள்ளேன். நாகன் வேல்கம்பால் எனது அப்பாவின் மூக்கில் வெட்டி துண்டித்துவிட்டார் என்று கூறியுள்ளேன். சங்கிலி என்பவர் கட்டையால் எனது அப்பாவை அடித்து காயப்படுத்தினார் என்று சொல்லியுள்ளேன். எதிரிகள் காலையில் 7.30 மணியளவில் நாங்கள் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்தோம். பின்னர் எதிரிகள் பாய்ச்சினார்கள். கிராமத்தில் யாரும் தண்ணீர் பாய்ச்சும் போது அடிக்ககூடாது என்ற விஷயம் தெரியும். எதிரிகள் எங்களுக்கு சென்ற தண்ணீரை அடைத்துவிட்டார் அதனால்தான் பிரச்சனை. எதிரி வயலுக்கு தண்ணீர் பாய்சியதால் நாங்கள் மூவரும் போய் கேட்டு வாய் தகறாரு ஏற்பட்டது. எதிரிகள் தரப்பில் எனது அண்ணன் தண்ணீர் பாய்ச்சும் போது ஏன் அடிததீர்கள் என்று கேட்க்கவில்லை. நாங்கள் அனைவரும் ஒரே வீட்டில்தான் சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். அன்றைய தினம் வீட்டிற்குள்ளும், தெருவிளக்கும் இல்லை என்றால் தெருவிளக்கு இருந்ததது. சம்பவ தேதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நாங்கள் தான் தண்ணீர் பாய்ச்சினோம் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கு சம்பவந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்க செல்லவில்லை. எதிரி தரப்பில் காவல் நிலைத்தில் புகார் கொடுக்கவில்லை. எங்கள் மீது எதிரிகள் கொடுத்த புகார் பற்றி இதுவரை தெரியாது.

வயக்காட்டில் நடந்த சம்பவத்திற்கு புகார் கொடுத்தார்களா அல்லது வீட்டில் நடந்த சம்பவத்திற்கு எதிரிகள் புகார் கொடுத்தார்களா என்று தெரியாது. நாங்கள் அனைவரும் சேர்ந்து எதிரிகள் தரப்பை அடித்து காயப்படுத்த சென்ற போது எங்களுக்குள் அடித்து காயப்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன தேதியில் சம்பவம் நடகவில்லை என்றாலும். போலீசில் புகார்

கொடுக்கவில்லை என்றாலும், சொன்ன ஆயுதங்களால் சொல்லப்பட்ட காயங்கள் ஏற்பட வாய்பில்லை என்றாலும் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

07.07.2022

C.C.257/2021

அ.சா.4

பூமிநாதன்

த/பெ.தனுஸ்கோடி

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். கு.வி.மு.ச. பிரிவு 311–ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் வைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை.

போலீசார் விசாரணையில் ஆறுமுகம் மட்டும் கம்பால் எனது அப்பாவின் புஜத்தில் அடித்து காயப்படுத்தியதாக நான் சொல்லவில்லை. சங்கிலி, கட்டையால் தனுஸ்கோடியின் மணிக்கட்டில் அடித்துக்காயப்படுத்தியதாக சொல்லியுள்ளேன். நாகன் என்பவர் வேல்கம்பால் தனுஸ்கோடியின் மூக்கை வெட்டிவிட்டதாக சொல்லியுளளேன். அதனால் எனது அப்பாவிற்கு மூக்கு துண்டாகிவிட்டதாக போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். நாகன் எனது அம்மாவை முதுகில் அடித்தார் என்று சொல்லவில்லை. அப்படி நான் சொல்லியிருந்தார் அது தவறு. ராஜேந்திரன் எனது அண்ணன் ராமசந்திரனை வேல்கம்பால் தலையில் அடித்து காயப்படுத்தினார் என்று சொல்லவில்லை. வெட்டி காயப்படுத்தினார் என்று சொல்லியுள்ளேன். ராஜேந்திரன் என்பவர் கட்டையால் என்னை முதுகில் அடித்து காயப்படுத்தினார் என்று நான் கூறவில்லை. முத்துமாணிக்கம் என்பவர் எனது அண்ணன் முத்துராமுவை வேல்கம்பால் அடித்து காயப்படுத்தியதாக கூறியுள்னே். காவல் நிலையத்தில் புகார் கொடுக்க நான் செல்லவில்லை.

எதிரி ஆறுமுகத்தை ஏன் வயக்காட்டில் தண்ணீர் பாய்ச்சிகிறார் என்று எனது அப்பா கேட்ட காலை 7.30 மணி சம்பவம் முதல் சம்பவம் என்றால் சரிதான். அந்த சம்பவம் நடக்கவில்லை என்றால் மேற்படி பிரச்சனை வாயப்பில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே முன் விரோதம் உள்ளது என்று சாட்சி கூறிவிட்டு தற்பொழுது இல்லை என்று சொல்கிறார். நான் முதலில் பார்க்கும்போது இருளாயி, முத்துராமன், எனது அப்பாவிற்கு காயம் இருந்ததா என்றால் இருந்தது. காயத்திற்கு பின்பு நான் கேட்த்தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. நான் பார்த்தேன். பொதுவான நபர்கள்

விசாரித்தாள் உண்மை சம்பவம் தெரியவரும் என்றால் சரியல்ல. சம்பவங்கள் அனைத்தும் வீட்டிற்குள் நடந்தது.

சம்பவத்திற்கு காரணம் எங்கள் தரப்பு என்றாலும் எதிரிகளை அடித்து காயப்படுத்தும்போது எங்களுக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சம்பவததை மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போது போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும், எதிரிகளால் எனக்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் சொல்வதால் அடித்த நபர்களையும், காயங்களையும் மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பாவை நான் பார்க்கும்போது எதிரிகள் யாரும் வயக்காட்டில் இல்லை. ராமச்சந்திரன் வைத்திருந்த கத்தி, கம்பால் இடது தோள்பட்டையில் வெட்டினார் என்று எந்த வழக்கும் என் மீது கிடையாது. முத்துராமன் ஆறுமுகத்தை அடித்து காயப்படுத்தி வழக்கு உள்ளது என்றால் இல்லை. அந்த வழக்கு ஆள் பலத்தையும் செல்வாக்கையும் வைத்து பொய் வழக்காக மாற்றிக்கொண்டோம் என்றால் இல்லை. அந்த வழக்கு நரிக்குடி காவல் நிலைய குற்ற எண்.179/2018 இதச பிரிவு 294(பி),323, 324, 506(2) இதச மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமைச் தடுப்பு சட்டம் பிரிவு 4 ன் கீழ் பதியப்பட்டது என்றால் சரியல்ல. இந்தவழக்கில் எனது தரப்பினர்கள் எதிரிகளாக உள்ளோம் என்றால் சரியல்ல.